**பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம், பெரியகிருஷ்ணாபுரம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் முன்னிலை: திரு.ஐ.ஆறுமுகம்.,**

**ந.க.எண்.02/2024** **நாள்.26.04.2024**

**பொருள்** மனைப்பிரிவு – சேலம் மாவட்டம் – பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம் – பெரியகிருஷ்ணாபுரம் ஊராட்சி சர்வே எண்கள். 13/5ஏ2, 13/7ஏ, 13/7பி1, 13/8ஏ1, 33/1–ல் 3.55.1/4 ஏக்கர் (அல்லது) 14384 சதுர மீட்டர் பரப்பில் உள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி கோரியது – நகர் ஊரமைப்பு துறையால் தொழில்நுட்ப அனுமதி வரைபடம் மற்றும் ஒப்புதல் வழங்கப்பட்டது – தொகை செலுத்தப்பட்டது – பொது இடங்கள் ஒப்படைத்தது – உத்தேச மனைப்பிரிவுக்கான ஒப்புதல் வழங்கி உத்தரவிடல் – தொடர்பாக.

**பார்வை**

1.நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/2020 போ, நாள்.24.12.2020.

2.அரசாணை எண்138, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள். 04.06.2004.

3.அரசாணை எண்18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்31.01.2020.

4.அரசாணை எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை யுடி4(3) நாள். 23.09.2020.

5.அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(1) நாள். 09.12.2020.

6.அரசு கடிதம் எண்.19113/நவ 4(3)/2017–வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.30.08.2017.

7.நகர் ஊரமைப்பு ஆணையர்,சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/ஏல்ஏ1,நாள்.08.09.2017.

8.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம் அவர்களின் கடித ந.க.எண். SLM/T70KQW33/15702/2023/2023/TCP, நாள்.14.12.2023

9.தலைவர், ஊராட்சி மன்றம், பெரியகிருஷ்ணாபுரம் என்ற பெயருக்கு பதிவு செய்யப்பட்ட தானபத்திரம் ஆவண எண்.7170/2023.

10.தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் என்ற பெயருக்கு பதிவு செய்யப்பட்ட தானபத்திரம் ஆவண எண்.7171/2023.

11.உரிய அரசு தலைப்பில் தொகை செலுத்தப்பட்டதற்கான சலான்கள். 20240424042419, நாள்.24.04.2024

12.பெரியகிருஷ்ணாபுரம் ஊராட்சி கணக்கில் செலுத்தப்பட்ட சலான் எண். AXSK24115000 4230, நாள்.24.04.2024

13.வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) பெத்தநாயக்கன்பாளையம் அவர்களின் கடித ந.க.எண்.1418/2020/தி2நாள்.24.04.2024.

14. பெரியகிருஷ்ணாபுரம் ஊராட்சி மன்றத்தின் தீர்மான எண்.06 நாள்.15.03.2024

**உத்தரவு :**

பார்வை–8ல் காணும் கடிதத்தில் சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றித்திற்குட்பட்ட பெரியகிருஷ்ணாபுரம் ஊராட்சியில் சர்வே எண்கள். 13/5ஏ2, 13/7ஏ, 13/7பி1, 13/8ஏ1, 33/1–ல் 3.55.1/4 ஏக்கர் (அல்லது) 14384 சதுர மீட்டர் பரப்பில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைக்க உத்தேச மனைப்பிரிவிற்கு Approval No.SWP/DTCP/SALEM/LAYOUT No.298/2023 என எண்ணிடப்பட்டு, தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை–9ல் காணும் பதிவு துறை ஆவணத்தின்படி ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்ட சாலைகள் மற்றும் திறந்தவெளி இடங்களை பெரியகிருஷ்ணாபுரம் ஊராட்சி மன்ற தலைவர் பெயருக்கு தான பத்திரம் செய்து பதிவு செய்யப்பட்டுள்ளது. பார்வை–10ல் காணும் பதிவு துறையில் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தின்படி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் என்ற பெயருக்கு தான பத்திரம் செய்து பதிவு செய்யப்பட்டுள்ளது.

பார்வை–11 மற்றும் 12ல் உள்ளவாறு முறையே மனை நில உபயோக மாற்றத்திற்கான 3% Market Value கட்டணம் ரூ.2,09,120/–ஐ உரிய அரசு தலைப்பிலும் மற்றும் மேலும் கூராய்வு கட்டணம் மனைக்கு தலா ரூ.1000/– வீதம் (ரூபாய் ஆயிரம் மட்டும்) மொத்தம் உள்ள 72 மனைகளுக்கு சேர்த்து (72'1000=72000) ரூ.72000/– ஐ (ரூபாய் எழுபத்தி இரண்டாயிரம் மட்டும்) ஐ பெரியகிருஷ்ணாபுரம் ஊராட்சி கணக்கிலும் செலுத்தி அதற்கான இரசீதினையும் சேர்த்து மனுதாரர் பெரியகிருஷ்ணாபுரம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளார்.

பார்வை 13–ல் காணும் பெத்தநாயக்கன்பாளையம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) அவர்களின் கடிதத்தில் மேற்காணும் உத்தேச மனைப்பிரிவிற்கு அனைத்து விதமான கூறுகளையும் உள்ளடக்கி அரசு விதிமுறைகளின்படி அனைத்து வசதிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்த பின்னர் உரிய உள்ளாட்சி விதிமுறைகளை பின்பற்றி இறுதி உத்திரவு வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் அனைத்து விதமான ஆவணங்கள், அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ள சலான் நகல்கள், உத்தேச மனைப்பிரிவு அமைய உள்ள இடத்தினையும் ஊராட்சி மன்ற தலைவரான என்னால் பார்வையிடப்பட்டு, உள்ளாட்சி விதிகளின்படி அனைத்து விதமான வசதிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்யப்பட்டுள்ளது. அதன்படி மேற்காணும் மனைப்பிரிவு அமைய உள்ள உத்தேச மனைப்பிரிவிற்கு பார்வை 14 ன்படி பெரியகிருஷ்ணாபுரம் ஊராட்சி மன்ற இசைவும் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, பெரியகிருஷ்ணாபுரம் ஊராட்சியில் சர்வே எண்கள். 13/5ஏ2, 13/7ஏ, 13/7பி1, 13/8ஏ1, 33/1–ல் 3.55.1/4 ஏக்கர் (அல்லது) 14384 சதுர மீட்டர் பரப்பில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைக்க உத்தேச மனைப்பிரிவிற்கு Approval No.SWP/DTCP/SALEM/LAYOUT No.298/2023 என எண்ணிடப்பட்டு, தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து **வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட கடிதங்களில் உள்ள நிபந்தனைகள் ஆகியவற்றின்அடிப்படையில்** மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

இணைப்பு- வரைபடம்

I. Arumugam.
தலைவர்
ஊராட்சி மன்றம்
பெரியகிருஷ்ணாபுரம்

பெறுதல் :
திரு.எம்.சஞ்சய் த/பெ. மதன்லால் சாவ்லா
15, சி, வித்யாலயா ரோடு, சேலம் – 7.

நகல்:
1.நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் சேலம்.
2.வட்டாட்சியர், பெத்தநாயக்கன்பாளையம்.
3.சார் பதிவாளர், வாழப்பாடி.
4.வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.), பெத்தநாயக்கன்பாளையம்.